
தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

மரம் 23 | ஏப்ரல் 2023 | கனி 5



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16


ஆசிரியர்
B. அர்ஜுனன்

MONTHLY
THE WORD OF CHRIST

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39



பாடம் : 40
தலைப்பு : எபிரெயன் – An Hebrew
வேத வாசிப்பு : பிலி.3:1-6

1. எபிரெயனாகிய ஆபிரகாமினிடத்தில் - ஆதி.14:13
2. எபிரெயருடைய தேவனாகிய கர்த்தர் - யாத்.3:18
3. எபிரெயரில் பிறந்த எபிரெயன் - பிலி.3:5




மாத இதழுக்கான
சந்தா செலுத்த இரு வழிகள்

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



JOIN OUR
WORLD EVANGELISM
BIBLE SCHOOL
RIGHT NOW



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

Contact Us: 94435 58041

**the word of christ** இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும்
**YouTube** வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509









**THE WORD OF CHRIST**
**Monthly Magazine**
Editor
B.ARJUNAN


### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை.
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் – 23 ஏப்ரல் – 2023 கனி – 5


ஆசிரியருரை

## பெரிய தீங்கு - A Great Evil



**தீ**ங்கு ஒரு மனிதனுக்கு பல வகையில் வருகிறது. அவனை அறியாமல் வருகிறது, சிலவேளைகளில் அவனுக்கு தெரிந்தே வருகிறது. "ஒருவன் புத்தி, யுக்தி, நிதானத்தோடு பிரயாசப்படுகிறான்; ஆகிலும் பிரயாசப்படாதிருந்த வேறொருவனுக்கு அவன் அதைச் சொந்தமாக விட்டுவிடவேண்டியதாகும். இதுவும் மாயையும் பெரிய தீங்குமாய் இருக்கிறது" என பிரசங்கி சொல்லுகிறான் (பிர.2:21).

வீ டு கட்டுகிறவர்கள் சகல நிதானத்தோடும் புத்தியோடும் யுக்தியோடும் மிக அழகாகவும் நேர்த்தியாகவும் அதை கட்டிமுடிக்கிறார்கள். அதற்காக அவர்கள் பட்ட பிரயாசத்திற்கு அளவே இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அந்த அளவு அதற்காக முயற்சி எடுத்து கட்டிமுடிக்கிறார்கள். இரவு பகலாக கண்ணுறக்கமில்லாமல் அந்த வேலைகளை செய்து முடிக்கிறார்கள். அதைப்போல ஒரு குடும்பத்தை கட்டுகிறதிலும் அதின் தலைவனும் அவனுடைய மனைவியும் அதற்காக எடுத்துக்கொள்ளுகிற முயற்சி பெரும் முயற்சியாக இருக்கிறது. ஆனால் கட்டுகிறவர்கள் வேதாகமத்தில் சொல்லியபடி தங்களுடைய வீட்டையும் தங்களுடைய குடும்பத்தையும் கட்டுகிறார்களா என்றால் அதிகமானோர் அந்தவிதமாக செய்வதில்லை.

இயேசு சொல்கிறார்: "என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறானென்று உங்களுக்குக் காண்பிப்பேன். ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின்மேல் அஸ்திபாரம் போட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்; பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும், அதை அசைக்கக் கூடாமற்போயிற்று; ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது" என்றார் (லூக்.6:47,48). முதலாவது இயேசுவினிடத்தில் வந்து அவருடைய வார்த்தைகளைக்கேட்டு அவைகளின்படியாக ஒரு வீட்டையும் குடும்பத்தையும் கட்ட முயற்சிக்கவேண்டும். அப்படிக்கட்டப்படுகிற குடும்பங்கள் ஆழமாய்த் தோண்டி கற்பாறையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்ட குடும்பங்களாக இயேசுவில் நிலைத்திருந்து அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு சாட்சியுள்ளவர்களாக தொடர்ந்து நிலைத்திருப்பார்கள். அநேகர் தங்களுடைய யோசனையின்படியும் மற்ற நண்பர்களுடைய யோசனையின்படியும் தங்களுடைய குடும்பத்தைக் கட்ட துவங்குகின்றனர். நாளடைவில் அந்தக் குடும்பங்களில் பிரச்சனைகளும், போராட்டங்களும் ஏற்பட்டு பிரிந்து

போகின்றார்கள். இது அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாபெரும் தீங்கா யிருக்கிறது.

கர்த்தருடைய வேலையைச் செய்கிற விஷயத்தில் பவுல் சொல்லுகிறார்; "அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும், ஏனெனில் அது அக்கினியிலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான்" என்கிறார் (1கொரி.3:13,14). தேவனுடைய சித்தத்தின்படியாக கட்டப்பட்டவைகள் நிலைத்திருக்கும். மற்றவைகள் அக்கினியால் பரிசோதிக்கப்படும்போது அவைகள் வெளிப்பட்டுவிடும். பொன்னை அக்கினியானது பரிசோதிப்பதுபோல அவனவனுடைய வேலைப்பாடு கர்த்தருடைய நாளிலே சோதித்துப்பார்க்கப்படும். அவன் சரியாக கன்மலையாகிய கிறிஸ்துவின் மீது அஸ்திபாரத்தைப்போட்டு தன்னுடைய வேலையைத் துவங்கியிருப்பானேயானால் அது நிலைத்திருக்கும். அவன் கர்த்தருடைய சமுகத்தில் வாடாத ஜீவ கிரீடத்தைப் பெறுவான். இல்லையேல் அவருடைய கோபக்கினையின் பாத்திரமாயிருப்பான்.

ஒருவன் புத்தி, யுத்தி, நிதானத்தோடு பிரயாசப்பட்டு அப்படிப் பிரயாசப்படாதிருந்த வேறொருவனுக்கு அவன் அதைச் சொந்தமாக விட்டுவிடவேண்டியதாகும் என பிரசங்கி குறிப்பிடுகிறாரே, இது மிகவும் வேதனையான ஒன்றாகவே இருக்கிறது. அதே நேரத்தில் சிந்திக்கவேண்டிய ஒன்றாகவும் இருக்கிறது. நாம் எதற்காக இப்படிப்பிரயாசப்படுகிறோம். யாரோ ஒருவன் இதை அனுபவிக்க நாம் ஏன் இப்படி பிரயாசப்படுகிறோம் என்று அவன் சிந்திப்பதுமில்லை. மேலும் நாம் பார்க்கும்போது; "ஒருவனுக்கு செல்வத்தையும் சம்பத்தையும் கனத்தையும் கொடுக்கிறார்; அவன் என்ன இச்சித்தாலும் அதெல்லாம் அவனுக்குக் குறைவில்லாமல் கிடைக்கும்; ஆனாலும் அவைகளை அநுபவிக்கும் சக்தியைத் தேவன் அவனுக்குக் கொடுக்கவில்லை; அந்நிய மனுஷன் அதை அநுபவிக்கிறான்; இதுவும் மாயையும் கொடிய நோயுமானது" என பிரசங்கி குறிப்பிடுகிறார் (பிர.6:2). சொந்தமாக மாந்தோப்பு இருக்கிறது வருடத்திற்கு 1000 டன் மாம்பழம் கிடைக்கிறது. ஆனால் அந்த பழங்களில் ஒரு மாம்பழத்தைக்கூட அவனால் சாப்பிட முடியாது ஏன் என்றால் அவனுக்கு சர்க்கரை வியாதி! இன்னும் இதைப்போல அநேக சம்பத்துக்கள் இருக்கிறது ஆனால் அவனால் அவைகளை அநுபவிக்க முடியாது. இருந்தபோதும் அவன் இச்சித்தவைகளை எல்லாம் அவனுடைய தேவன் அவனுக்கு கொடுக்கிறார். ஆனால் அவைகளை அவன் அநுபவிக்க முடியவில்லையே இது கொடிய நோய்போன்றது என்கிறார். ஆம், அன்பானவர்களே, இந்த உலகத்தில் பசிக்கிறவனுக்கு அவன் இச்சித்தது கிடைக்கவில்லை. கிடைத்தவனுக்கு அதை உட்கொள்ளமுடியாத சூழ்நிலை. இவைகள் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது. இவைகள் பெரிய தீங்குமாயிருக்கிறது எனக் காண்கிறோம். லூக்.6:49-ல் வாசிக்கிறோம் "என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்லாமல் மண்ணின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான்; நீரோட்டம் அதின்மேல் மோதினவுடனே அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்". ஆம் அன்பானவர்களே, உங்களால் ஒன்றும் செய்யமுடியாமற்போகிறது அதற்கு காரணம் என்ன? நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்யவில்லை.

கர்த்தருடைய வசனத்தின்படி உங்களுடைய அஸ்திபாரத்தை போடவில்லை. மண்ணின்மேல் வீடுகட்டின மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள். ஆழமாய்தோண்டி அஸ்திபாரம் போட்ட வீடு நிலைத்திருக்கும்.

கடைசியாக, பிரசங்கி இதுவும் மாயையும் பெரிய தீங்குமாயிருக்கிறது என்கிறான். ஆம், புத்தியோடும் யுத்தியோடும் நிதானத்தோடும் பிரயாசப்பட்டு கனவுகண்டு கட்டப்பட்ட வீட்டை விட்டுவிடுகிறான். அதை பிரயாசப்படாதிருந்த வேறொருவன் வந்து அநுபவிக்கிறான். அவன் கண்ட கனவுகள் எல்லாம் வீணாய் போய்விட்டன. இது அவனுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட பெரிய தீங்காயிருக்கிறது. வேதாகமம் சொல்லுகிறபடி தன்னுடைய அஸ்பாரத்தை போட்டிருப்பானேயானால் அந்த வீடு நிலைத்திருக்கும். அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்லும்போது; "உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்" என்கிறார் (1தீமோ.6:8). மனிதனுக்கு இந்த உலகத்தில் தேவையானவை இரண்டு. உண்ண உணவும், உடுக்க உடையும். இந்த இரண்டையும் ஆதியிலே பிதாவாகிய தேவன் ஆதாமுக்கு கொடுத்தார். இது இன்றுவரை குறைவில்லாமல் இப்பூமி கொடுத்துக்கொண்டே இருக்கிறது. அவன் தங்குவதற்கு பறந்துவிரிந்த உலகத்தில் எங்குவேண்டுமானாலும் தங்கிக்கொள்ளலாம் அந்த அளவு பெரிய உலகத்தை கொடுத்திருக்கிறார். இதை மனிதன் அறியாது தனக்காக தன்னுடைய இச்சைகளை நிறைவேற்றும்படியாக இரவுபகலாக பிரயாசப்படுகிறான். கடைசியில் வருத்தத்தையும் சஞ்சலத்தையும் அடைகிறான். அத்தோடு பலவிதமான நோய்களையும் உடையவனாய் மரிக்கிறான்.

லாசரு என்ற ஒரு மனிதனைக்குறித்து நாம் வேதத்தில் படிக்கிறோம். "அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந்த துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிஜீவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான்.

அதற்கு ஆபிரகாம்; மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய்" என்றார் (லூக்.16:20-25). லாசரு பூமியில் இருக்கும் நாட்களில் கஷ்டத்தை அநுபவித்தாலும் அவன் முடிவில் நல்ல ஒரு இடத்தில் கொண்டு செல்லப்பட்டான். ஒரு மனிதனுக்கு பூமி நிலையானது அல்ல. நிலையான இடம் ஒன்று தேவனுடைய இருப்பிடம் அல்லது தேவனால் நியமிக்கப்பட்ட பாதாளம். ஐசுவரியவானோ பாதாளத்திலே தள்ளப்பட்டு வேதனையை அநுபவித்தான். அன்பானவர்களே, தேவன் ஒருவரும் கெட்டுப்போக விரும்பாமல்

எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும் என்று விரும்புகிறார். ஆனால் உலக சம்பத்துக்களையும் உலக ஆசீர்வாதங்களையும் நம்பி ஏமாற்றப்படுவோர் கோடிக்கணக்கில் இருக்கின்றனர். என்னதான் சொன்னாலும், எப்படிப்பட்ட போதனைகளை வேதாகமத்திலிருந்து எடுத்துச் சொன்னாலும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், சத்தியத்தை நேசிக்கிறவர்களுமே செவிகொடுத்து இரட்சிக்கப்படுகிறார்கள். மற்றவர்கள் செவிட்டு விரியனைப்போல காதுகளை அடைத்துக்கொள்ளுகிறார்கள். இந்த ஐசுவரியவானும் பூமியில் இருக்கும்போது சம்பிரமமாய் வாழ்ந்து, பாதாளத்திற்கு சென்றபின்பு ஐயோ வரக்கூடாத இடத்திற்கு வந்துவிட்டோமே என்று சொல்லி வேதனைப்பட்டு தன்னுடைய உறவினர்களும் இந்த இடத்திற்கு வந்துவிடாதபடி யாரையாவது இங்கிருந்து அனுப்பவேண்டும் என்று ஆபிரகாமைப் பார்த்து கேட்டுக்கொள்ளுகிறதை நாம் வேதத்தில் படிக்கிறோம்.

பூமியிலே மனந்திரும்பவேண்டிய மனிதன் பாதாளத்திலே திரும்பி என்ன பயன்? நடுவே பெரும்பிளவு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்று ஆபிரகாம் பதில் கொடுக்கிறார். பாதாளத்திற்கு சென்றவன் ஒருக்காலும் ஏறிவரமுடியாது எனக் காண்கிறோம். அவர்கள் நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே நீ புத்தியோடும் யுக்தியோடும் நிதானத்தோடும் சகல சம்பத்தையும் பெற்று வேறொருவனுக்கு அநுபவிக்கும்படி அதை விட்டுச் செல்ல ஆயத்தமாயிருக்கிறாயா? இது உன்னுடைய வாழ்க்கையில் ஏற்படப்போகும் ஒரு பெரிய தீங்கு அல்லவா? வேதம் சொல்லுகிறபடி நீ உன் அஸ்திபாரத்தை கர்த்தர் மீதும், அவருடைய வல்லமையுள்ள வசனத்தின் மீதும் வைப்பாயானால். நிலையான ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக்கொள்ளுவாய். இன்றே கர்த்தருடைய வசனத்திற்குச் செவி கொடு.

**காரியத்தின் கடைத்தொகை என்ன?**

பிரசங்கி சொல்லுகிறான்; "காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்" (பிர.12;13-14). ஒவ்வொரு மனிதனும் சிந்திக்கவேண்டிய வசனமாக இது இருக்கிறது. கணக்கு பார்க்கிறவர்கள் மீதம் என்ன என்று கணக்கிடுவார்கள். அது அவர்களுடைய கணக்கின் முடிவாக இருக்கிறது. அதைப்போல ஒவ்வொரு மனிதனும் வாழ்ந்த வாழ்க்கை அவனுடைய செயல்பாடுகள் என்ன? இவைகளைப் பார்க்கும்போது அதுவே அவனுடைய முடிவாக இருக்கிறது.

பிரசங்கி எல்லாம் மாயை மாயை என்று சொல்லிவிட்டு காரியத்தின் கடைத்தொகைக்கு வருகிறார். வெளிக்கு வராத விஷயம் ஒன்றும் இல்லை. எல்லாவற்றையும் தேவன் கொண்டுவருவார். இங்கே மற்றவர்களுக்கு முன்பாக தன்னை நீதிமான்போல் ஒருவர் காட்டிக்கொள்ளக்கூடும். அவர் உண்மையிலே நீதிமானா? அல்லது துன்மார்க்கனா? என்பது நியாயத்திலே தெரியவரும். இதில் ஒருவரும் தப்பிக்கொள்ளமுடியாது. ஏனெனில் தீர்ப்பு தேவனுடையதாயிருக்கிறது. ஆகையால் தேவனுக்குப் பயந்து கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



# கருக்கலைப்பு

## Abortion

*-J.C.Choate*

**–சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**

மற்ற சிசுக்கள் உறிஞ்சுதல் மூலம் கொல்லப்படுகிறது: அவைகள் தாயின் கருவிலிருந்து உடலுறுப்பாக உண்மையில் உறிஞ்சப்படுகின்றன, பின்னர் அவைகள் உப்பு, அமிலக் கரைசல் ஆகும். அவைகள் கருப்பையில் செலுத்தப்ப டுகின்றன இதனால் குழந்தைக்கு ஒரு வேதனையான மரணம் ஏற்படுகிறது இவையெல்லாவற்றையும் உங்களால் கற்பனை செய்து பார்க்க கூடுமா? என்றாலும், என்னுடைய நண்பரே, இது தொடர்ந்து உன்னுடைய நாட்டில் இன்றும் நடந்துகொண்டிருக்கிறது.. கருக்கலைப்பு மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ள உன்னுடைய சொந்த நகரத்திலும் இவைகள் நடைபெறலாம். ஒரு நபர்கூட இந்த குழந்தைகளுக்காகப் பேசமாட்டார்களா? அவைகள் தாமாகவே பேசமுடியாது, அவர்களுடைய தாய்மார்களும் கூட பேசமுடியாது, மருத்துவர்கள், நர்சுகள் மற்றவர்கள் பேசமுடியாது, அவர்கள் அவைகளைக் காப்பாற்றும்படி அவர்களுடைய ஜீவனை மதிக்கிறதில்லை. என் நண்பரே, இது வெட்கக்கேடான மற்றும் மனிதாபிமானமற்ற செயல் என்று இங்கே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நிச்சயமாக ஆண்களும் பெண்களும் தங்கள் பாவங்களில் இவ்வளவு தூரம் சென்றால், எதிர்காலத்தில் நமக்கு என்ன மிஞ்சும்?

ஹிட்லரைப் பற்றியும் அவருக்கு முன்னும் பின்னும் இருந்த மற்றவர்களைப் பற்றியும் நாம் சிந்திக்கிறோம் மேலும் அவர்களின் கொடுமையை நாம் நினைக்கிறோம், ஆனால் அவர்களை விட நாம் மோசமானவைகளைச் செய்யவில்லையா? கொடுமை வாய்ந்த ஏரோது பெத்லகேமில் கிறிஸ்துவின் பிறப்பின் நாட்களில் கிறிஸ்துவைக் கொல்லும் முயற்சியில் இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் பிள்ளைகளையும் கொல்லுவதற்கு தன்னுடைய போர்ச் சேவகர்களை அனுப்பினான் என்பதை வேதாகமத்தில் வாசித்து, அது எவ்வளவு கொடுமையான செயல் என நினைக்கிறோம். ஆனால் உலகம் நூற்றுக்கணக்கான மில்லியன்களால் இன்னும் பிறக்காதவர்களுக்கு இன்று என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதை ஒப்பிடுகையில் இது ஒன்றுமில்லை!

இன்று உலகம் செய்து கொண்டிருக்கிறதை நாம்முடைய பெற்றோர்கள் செய்திருப்பார்களென்றால், நாம் பிறந்திருக்கவேமாட்டோம், ஏனென்றால் நாம் கருச்சிதைவுற்றுப் போனவர்களோடே இருந்திருப்போம். மாபெரும் மக்களும் கருச்சிதைவுற்றவர்களோடே ஏற்கனவே இருந்திருக்க வேண்டிய எல்லா சாத்தியக்கூறுகளையும் பற்றி சிந்தியுங்கள். நடக்கும் கருக்கலைப்புகளால் ஒருபோதும் வாழப்போவதில்லை என்று அனைத்து திறமையுள்ள மனிதர்களையும்

நினைத்துப் பாருங்கள். அவர்கள் இவ்வுலகத்திற்குள் பிரவேசிக்கும் தங்களுடைய தருணத்தினையும் மனிதநேயத்திற்குரிய தங்களுடைய பங்களிப்பினையும் பெற்றுக்கொண்டிருக்க மாட்டார்கள்.

வெகுகாலத்திற்கு முன்பே சாலொமோன் குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங்கையையுடையவர்களை தேவன் வெறுக்கிறார் என்று சொன்னான் (நீதி.6:16,17). கொலை செய்வது தவறு என்று பழைய ஏற்பாடு புதியஏற்பாடு ஆகிய இரண்டு புத்தகங்களிலும் நாம் வாசிக்கிறோம் (யாத்.20:13; ரோம.13:9). இந்த வேதவாக்கியங்கள் கொலை செய்வது குறித்து மீண்டும் மீண்டும் பேசுகிறது. பவுல் கொலைகாரர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை என்கிறான். அவன் அவற்றை மாம்சத்தின் கிரியை என்று அழைத்தான் (கலா.5:19-21) மேலும் யோவான், "... மனுஷ கொலைபாதக னெவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள்" (1யோவா.3:15) என்றான். மீண்டும் யோவான், "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாரதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்" (வெளி.21:8). தன்னுடைய அப்பாவி குழந்தையைக் கொன்றதற்காக ஒருவன் கொலையாளி இல்லையென்றால் யாரேனும் ஒருவனை எப்படி கொலைகாரன் என்று அழைக்க முடியும்? கருக்கலைப்பு செய்கின்ற மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் கொலை செய்யவில்லையென்றால் பிறகு யார் கொலையாளியாக வகைப்படுத்தப்பட முடியும்? என் நண்பரே, அப்பாவி குழந்தைகளை - அவர்களின் சொந்த குழந்தைகளை - அவர்கள் கொன்றுவிடுவார்கள் என்று மக்கள் மிகவும் கடினமாகிவிட்டால், அடுத்து நாம் என்ன எதிர்பார்க்க முடியும்? உடல் ரீதியாகவோ மன ரீதியாகவோ ஆரோக்கியமில்லாத எந்த வயதினரையும் கொலை செய்வதா? பெரியவர்களுக்குக் கருணைக் கொலையா? யாருடைய அதிகாரங்கள் அவர்கள் மேல் இருக்க வேண்டும் என்று முடிவுசெய்கிறார்களோ அவர்களுக்கு மரணமா? நம் சமுதாயம் மனித உயிர்களை விட வனவிலங்குகளின் உயிர் மீது அதிகம் அக்கறை காட்டும்போது, மனிதனுக்கு நம்பிக்கை உண்டா? நோவாவின் காலத்தில் எங்குமிருந்த தீமையை நாம் அடைகின்றோமா?

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஏறக்குறைய பாதி கர்ப்பங்கள் திட்டமிடப்படாதவைகள் மற்றும் பத்தில் நான்கு கருக்கலைப்பினால் முடிவடைகின்றன என புள்ளிவிவரம் சுட்டிக்காட்டுகிறது, ஒவ்வொரு நாளும் 3000 க்கும் மேலாக கருக்கலைப்பு நடைபெறுகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒட்டு மொத்த கர்ப்பங்களில் 20 சதவீதம் (கருச்சிதைவுகள் தவிர) கருக்கலைப்பினால் முடிவடைகின்றன. உலக முழுவதிலும் ஏறத்தாழ 50 மில்லியன் கருக்கலைப்புகள் ஒவ்வொரு வருடமும் நடைபெறுகின்றன!

மனிதன் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டிருக்கிறான், ஒவ்வொரு மனிதனும் ஒரு ஆத்துமாவை பெற்றுள்ளான், ஒரு ஆத்துமா என்பது உலகம்

முழுவதைக் காட்டிலும் விலையேறப்பட்டது இன்னும் பல காரியங்களைக் குறித்த உண்மையான வேதாகம கோட்பாடுகள் பலவற்றை உங்களுக்கு என்னால் கொடுக்க முடியும், ஆனால் கொலைகாரர்களுக்கு அந்த உண்மைகளின் அர்த்தம்? ஒருவேளை ஒன்றுமில்லை, ஆனால் ஒரு கொலைகாரன் - ஒரு குழந்தை கொலைகாரன் கூட - அந்த நபர் மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் அவன் மன்னிக்கப்பட்டு இரட்சிக்கப்பட முடியும். அநேகர் இதைச் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

என்னுடைய முதன்மையான அக்கறை உங்களுக்கானது. ஒருவேளை நீங்கள் பிரச்சனைகளில் அகப்பட்டுள்ள ஒரு இளம் பெண்ணாக, கர்ப்பம் தரித்தவளாக, மேலும் பிரச்சனையிலிருந்து விடுபட ஒரே வழி கருக்கலைப்பு செய்யவேண்டியுள்ளது தான் என்று நினைக்கலாம். நான் உங்களை ஒன்று கேட்கட்டும், நீங்கள் செய்தவற்றுடன் கொலையைச் சேர்க்க இது உதவுமா? ஒருவேளை நீங்கள் பல குழந்தைகளுக்கு ஒரு தாயாக இருந்து கொண்டு இன்னொரு குழந்தையையும் கொண்டிருப்பதற்கு விரும்பாமல் இருக்கலாம். பிறக்காத குழந்தையை நீங்கள் கொன்றால், உங்களுடைய மற்ற குழந்தைகளை நீங்கள் எப்படி நேசிக்க முடியும். உங்கள் மீது மரியாதை வைத்து, உங்களுக்கு முன்னால் எவ்வகையான வாழ்க்கையை கொண்டிருக்க முடியும்? கவனியுங்கள், இளம் பெண்ணுக்கோ, வயது முதிர்ந்தவருக்கோ, அந்த குழந்தையைப் பெற்றுக்கொண்டு அதன்பின் மற்ற குடும்பத்தார் அதைத் தத்தெடுப்பதற்கு அனுமதிப்பதே நீங்கள் செய்ய வேண்டிய சரியான செயல். ஒவ்வொரு வழக்கின் தத்தெடுப்பு செயல்முறையிலும் பல ஆயிரம் டாலர்கள் செலவு செய்யப்படுகின்றன. தத்தெடுப்பினை இலவசமாக்கி இந்த குழந்தைகளுக்கான அன்பான வீடுகளை உருவாக்குவது நல்லது அல்லவா? இதுவே உங்களுடைய குழந்தைகளைக் கொல்லாமலிருப்பதற்கான வழியாக இருக்கிறது.

பொது மக்களாகிய உங்களுக்கு, உங்கள் பகுதியில் கருக்கலைப்புக்கு எதிராக நீங்கள் என்ன செய்ய முடியும் என்பதைப் பார்க்க நான் உங்களை ஊக்குவிக்கிறேன். நிச்சயமாக இந்த முயற்சியில் உங்களோடு இணைய விரும்பும் மற்றவர்கள் உள்ளனர். இந்தக் குற்றத்திற்கு எதிராக பேசுங்கள். என்ன நடக்கிறது என்பதை மற்றவர்களுக்குத் தெரிவிக்க நாடுங்கள். தேவைப்படுபவர்களுக்கு உதவ முன்வாருங்கள். இம்முயற்சியில் ஈடுபடுகிற மற்றவர்களுக்கு உதவ நாடுங்கள். நீங்கள் ஒருவர் தான் என்று நீங்கள் கூறலாம், ஆனால் நாம் அனைவரும் ஒன்றுதான், நாம் அனைவரும் ஒன்றாக சேர்ந்து பல காரியங்களை உருவாக்கு வோம். மேலும் பலர் பெரிய எண்ணிக்கையில் இப்போம். நாம் செவிசாய்ப்போம், நாம் சிலவற்றை செய்வோம். நாம் பிறக்காத குழந்தைகளுக்காக, மற்றவர் களுக்காக, நமக்காக, உலகத்திற்காக மேலும் ஜீவனுக்காக மட்டுமே. இதைச் செய்வோம்.

இக்காரியங்களில் நீங்கள் எங்கே நிற்கிறீர்கள்? நீங்கள் உயிருக்காக, ஒவ்வொரு மனிதனின் வாழ்விற்காக, பிறந்தவர்கள் அல்லது பிறக்காதவர்களோ

## நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே பின்பற்றி அவரையே சேவிப்போம்

## As For Me and My House, We Will Follow and Serve the Lord

*-Peter Mostert*



நித்தியமாக இழந்த நிலையில் இருக்கின்ற பயத்தினால் நான் ஒரு கிறிஸ்தவனாக மாறும்படிக்கு எனக்கு வலிமைமிக்க மன ஆயத்தம் கொடுக்கப்படலாம். நான் கிறிஸ்தவ சூழலில் வளர்க்கப்பட்டிருந்த போதிலும் அதாவது சிறுவயதிலிருந்தே என்னுடைய பெற்றோர் என்னை கிறிஸ்தவனாக வளர்த்திருந்த போதிலும், என்னுடைய தாயார் கர்த்தருடைய ஜெபத்தை எனக்கு போதித்தபோதிலும், நான் பல்வேறு சபைகளில் கலந்து கொண்டபோதிலும்- நான் முழுமையற்றவனாக உணர்ந்தேன்.

நான் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றபோது நான் பத்தொன்பது வயதுடையவனாகயிருந்தேன் அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து வந்து நியூசிலாந்தில் ஊழியப்பணிசெய்து கொண்டிருந்த சபை அங்கத்தினர்கள் என்னுடைய சகோதரனையும், இரண்டு வருடங்களுக்குப்பிறகு என் தந்தையையும், தாயையும் என்னையும் அப்போஸ்தலர் 2:38-ன்படி சத்தியத்திற்குக் கீழ்ப்படியபண்ணினார்கள் - அதாவது மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியைப் பெறும்படி செய்தார்கள்.

இயேசுவில் விசுவாசம் கொள்வதில் எனக்கு ஒரு போதும் பிரச்சனை இருந்ததில்லை - எப்போதும் என்னுடைய ஆதி விசுவாசத்தின்படி இது நடைபெற்றது!

ஞானஸ்நானத்தில் கீழ்ப்படிவதில் எனக்குப் பிரச்சனை இல்லை - ஒருசமயம் நான் சத்தியத்தை விசுவாசித்தேன், நான் மனப்பூர்வமாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டேன்.

மனந்திரும்புதல் என்பது எனக்கு உண்மையிலே ஜீவியம் - மாற்றம் நிகழ்ச்சியாக இருந்தது. நான் என்னுடைய "உலகப்பிரகாரமான" நண்பர்களை விட்டு விலகி, ஒவ்வொரு ஆராதனைக்கும் சபையோடு சேர்ந்துகொண்டேன், மேலும் என்னுடைய வாரத்தின் இறுதி நாட்களை வீடுவீடாக சுவிசேஷத்தைப் போதிப்பதில் செலவழித்தேன். நான் கிறிஸ்துவுக்கு, என்னுடைய பிள்ளைகளை கஷ்டப்பட்டு முயற்சி செய்து கிறிஸ்தவர்களாக வளர்த்து அவர்களை ஒரு கிறிஸ்தவப்பல்கலைகழகத்திற்கு அனுப்பி, அவர்கள் கிறிஸ்தவர்களை திருமணம் செய்யும்படி உற்சாகப்படுத்தி, ஊழியக் களத்தில் நுழைந்து கிறிஸ்துவின் சபையில் வழிநடத்துனர்களாக மாறவும் அர்ப்பணித்து நிலைத்திருந்தேன்.

என்னுடைய ஒட்டு மொத்த கிறிஸ்தவ அனுபவம் முழுவதிலும், எப்படியோ, நான் தொடர்ந்து மல்லுக்கட்டுவதே மிச்சமாயிருந்தது மேலும் புரிந்து கொள்வதிலும் விசுவாசிப்பதிலும் கடினமான சூழ்நிலையைப் பெற்றிருந்தேன். இவ்வுலகில் தேவன் அதிகமாக வேதனையையும், துன்பத்தையும் அனுமதிக்கிறார் என்பதையும் அவருக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு தேவன் நரகத்தை அனுமதிக்கிறார் என்பதையும் நம்புவதற்குக் எனக்குக் கடினமாக இருந்தது; என்னைப் போன்ற பலவீனரை தேவன் தம்முடைய சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பயன்படுத்துகிறார் என நம்புவதற்கும் கஷ்டமாகயிருந்தது; ஞானஸ்நானம் பெற்றவர்கள் மாத்திரமே இரட்சிக்கப்படுவார்களென நம்புவதற்கும் கடினமாகயிருந்தது; என்னுடைய பாவங்களுக்காக இயேசு மரிக்க வேண்டியிருந்தது என நம்புவதற்கும் கடினமாகயிருந்தது; என்னுடைய தாலந்துகளை நான் பயன்படுத்தாவிட்டால் தேவன் என்னை ஏற்றுக்கொள்ள மாட்டாரென நம்புவதற்கும் கடினமாகயிருந்தது; சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்காத எண்ணிலடங்கா மில்லியன் ஜனங்கள் அழிந்து, அப்படியே போய்விடுவார்களென நம்புவதற்கும் கடினமாகயிருந்தது.


ஆனால் “என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது” (ஏசா.55:8,9) என்று தேவன் சொல்லுகிறார். படைக்கப்பட்டது படைத்தவரை நியாயந்தீர்க்கும் நிலையிலில்லை, நமக்குக் கடினமாகத் தோன்றுகிறது அல்லது நம்மால் புரிந்துகொள்ள முடியாதது என தேவனுடைய நியமங்களை மாற்றி எழுதுவதற்கும் நமக்கு அதிகாரமில்லை. நம்முடைய தேவன் சர்வ வல்லமையுடையவர். அவர் செய்கிறதெதுவோ அது சரியானது. காத்திருக்கவேண்டியதே நம்முடைய பங்கு. இன்று கடினமாகத் தோன்றுகிறவைகளை ஒரு நாள் நாம் புரிந்துகொள்ளுவோம்.

ஆனால் ஒரு மனிதனாக, இந்தக் கடினமான காரியங்ககளைப் புரிந்துகொள்ள முடியாதது எனக்குப் பாரமாகயிருக்கிறது. இருந்தபோதிலும் இதை விட்டு விடவோ அல்லது பின்வாங்கவோ நான் மறுக்கிறேன். நான் எனக்காக அதிகமானவற்றைச் செய்திருக்கிற தேவனை விட்டு விலகும்படிக்கு சாத்தானாலும், அவனுடைய தூதனாலும், தூண்டப்படவோ, வஞ்சிக்கப்படவோ மாட்டேன். நான் தீர்மானிக்கப்பட்டவன்! இந்த உலகமுழுவதும் தேவனுக்கு எதிராகத் திரும்பினாலும், நான் அவரை விட்டு விலக ஆயத்தமாயில்லை. என்னுடைய எல்லா மனதாலும், உணர்வாலும், ஆவிக்குரிய பலத்தாலும், நான் விசுவாசத்தில் நிலைத்திருப்பேன். நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே பின்பற்றி அவரையே சேவிப்போம்!

ப.ஏ

வேதாகம கதாபாத்திரங்கள்
Bible Characters

15



## பரிசுத்த வேதாகமத்தில் யூதா
## Judah In The Holy Bible

1. யாக்கோபுக்கும் லேயாளுக்கும் பிறந்த நான்காவது மகன் - ஆதி.35:23
2. இவனுக்கு பெயரிட்டது லேயாள் - ஆதி.29:35
3. யாக்கோபின் ஆசீர்வாதம் சகோதரரால் புகழப்படுபவன் நீயே - ஆதி.49:8
4. சமாதான கர்த்தரின் வருகை முன் அறிவிக்கப்பட்டது - ஆதி.49:10
5. மோசே நாட்களில் யூத கோத்திரத்தார் முதலாவதாக போனார்கள் - எண்.2:9
6. மனாசே ராஜா யூதாவைப் பாவஞ்செய்யப் பண்ணினான் - 2இரா.21:16
7. யோயாக்கீம் ராஜாவின் நாட்களில் கல்தேயரின் தண்டுகளையும் மற்ற தண்டுகளையும் வரவிட்டார் - 2இரா.24:2
8. தேவனோடே அரசாண்டான் - ஓசியா 11:12
9. யூதா கோத்திரத்தை தெரிந்துகொண்டார் - சங்.78:68
10. கர்த்தர் யூதா கோத்திரத்தில் தோன்றினார் - எபி.7:14

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

*யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் எவர்?*

**விடை:** இயேசு - "யூதா, கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும், அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயக்கொண்டிருக்கிறார் என்றான்"(வெளி.5:5)



பு.ஏ

# வேதாகம கதாபாத்திரங்கள்
# Bible Characters

16



## பரிசுத்த வேதாகமத்தில் லூக்கா
## Luke In The Holy Bible

1. இவன் ஒரு வைத்தியன் - கொலோ.4:14
2. இவன் எழுதிய புத்தகங்கள் இரண்டு. லூக்கா மற்றும் அப்போஸ்தல நடபடிகள் - லூக்கா 1:1 - அப்.1:1
3. புறமார்க்கத்திலிருந்து, ஒருவேளை பவுலின் போதகத்தால் கிறிஸ்தவனானான் எனக் கருதப்படுகிறது
4. பவுலின் ஊழியத்தில் லூக்கா உறுதுணை - 2தீமோ.4:1
5. தெயோப்பிலுவுக்கு எழுதினான்
6. பவுலின் உடன் வேலையாட்களில் இவனும் ஒருவன் - பிலே.24
7. இயேசுவின் பிறப்பு முதல் ஆதாம் வரை வம்சவழிகளைப் பட்டியலிடுகிறான் - லூக்.3:23
8. இயேசுவின் பிறப்பு முதல் அவர் எடுத்துக்கொள்ளப்படும் வரை எழுதப்பட்ட ஒரு சுவிசேஷம் - லூக்.1:31 - லூக்.24:51
9. பவுலுடைய ஊழியம் கடைசி நாட்களில் ரோமில் முடிவடைந்ததாக லூக்கா எழுதியிருக்கிறார் - அப்.28:16
10. இரத்த சாட்சியாக மரித்ததாக வரலாறு பேசுகிறது

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

*தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்த வாலிபன் மரித்துப்போனான் அவனை இயேசு எழுப்பினார். எந்த ஊரில்? (மற்ற சுவிசேஷத்தில் சொல்லப்படாதவை)*

**விடை:** நாயீன் - ..."அவர் நாயீன் என்னும் ஊருக்குப்போனார்...மரித்துப்போன ஒருவனை அடக்கம்பண்ணும்படி கொண்டுவந்தார்கள்...அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான்... அவர்: வாலிபனே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து பேசத்தொடங்கினான்" (லூக்.7:11-15)



நீங்கள் உங்கள் மனதை தேவனுடைய வார்த்தையால் நிரப்பாவிட்டால், சத்துரு அதை பயத்தினாலும், விசாரத்தினாலும், மனஅழுத்தத்தினாலும், கவலையினாலும் சோதனையினாலும் நிரப்புவான்






If you don`t fill your mind with the word of God, the enemy will fill it with fear, anxiety, stress, worry and temptation

## வாசகர் கடிதம்...

*அய்யா, இவ்வாண்டு சில இதழ்கள் எனக்கு வரவில்லை வருந்துகிறேன்.*

*கர்த்தரின் பணியில் அய்யா அவர்களுக்கு இயேசுவின் நாமத்தில் தோத்திரம். அய்யா, நான் சில வருடங்களாக தங்களின் இதழ் பெற்று தொடர்ந்து தேவசெய்திகள் படித்து, வேத அறிவுப்போட்டியில் எழுதிவருகிறேன்.*

*அய்யா என்னை மன்னிக்கவும். நான்* **Rtd Tr.** *யூனியன் பள்ளி. வயது 77. அய்யா 'ஒரே வழி' தபால் வழி வேதபாடம் படிக்கலாமா? வயதாகிவிட்டதே.*

*தங்களின் இதழ் வாசகர்,*
**C.***அதிசயம்,*
*பனைகுடி*

'ஒரே வழி' தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள் இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி, ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

பெண்கள் பகுதி

# விசேஷித்த மேன்மை *(பகுதி – 2)*
# Special Distinction (Part - 2)

*-Glory Arjunan*



**வே**தாகமத்தில் விசேஷித்த மேன்மையான இடத்திலிருந்த சில ஸ்திரீகளாகிய **சிலுவையின் கடைசி (Last At the Cross)** வரை இயேசுவோடு இருந்த மகதலேனா மரியாள், யோசேயின் (இயேசுவின் தாயும்கூட) தாயாகிய மரியாள், **முதலாவது கல்லறையினிடத்திலிருந்து (First At the Tomb)** இயேசுவை தரிசித்த மகதலேனா மரியாள் மற்றும் **முதலாவது இயேசுவின் உயிர்த்தெழுதலை அறிவித்த (The First to proclaim Resurrection)** மகதலேனா மரியாள் மற்ற மரியாள் ஆகியோரின் மேன்மையான காரியங்களைக் குறித்து வேதாகம ஆதாரத்துடன் அறிந்து கொண்டோம். அதைப்போலவே வேதாகமத்தில் விசேஷித்த மேன்மையான இடத்தைப்பிடித்த வேறு சில சகோதரிகளைக்குறித்தும் ஆராய்ந்து பார்ப்போம்.

**முதலாவது யூதர்களுக்கு அறிவித்தவள் (The First Preach to the Jews):**

யார் அவள்? எதைப் பற்றி அறிவித்தாள்? லூக்கா2:36,37-ல் அவளைக் காணலாம், "ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள்; அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானதுமுதல் ஏழு வருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும், அதிக வயதுசென்றவளுமாயிருந்தாள். ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமலும், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம் பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள். அவளும் அந்நேரத்திலே வந்து நின்று, கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக் குறித்துப் (இயேசுவை) பேசினாள்". இந்த தீர்க்கதரிசி எருசலேமிலே தங்களுக்கு மீட்புண்டாக வேண்டும், இரட்சிப்புண்டாக வேண்டுமென காத்திருந்த யூதர்களுக்கு இயேசுவைக் குறித்து அறிவித்தாள். பாவத்திலிருந்து யாவரையும் மீட்கப்போகிற இயேசு இவர்தான் என்று யூதர்களுக்கு அறிவித்தாள்.

அன்பு சகோதரியே, அவளுடைய சூழ்நிலைகளை அறிந்தீர்களா? ஒன்று, அவள் தன் புருஷனோடு ஏழுவருஷம் மட்டுமே வாழ்ந்தவள், அடுத்தாக, அவள் ஏறக்குறைய எண்பத்துநாலு வயதை அடைந்த விதவை. கன்னிப்பருவத்தில் விவாகம் செய்து ஏழு ஆண்டுகள் மட்டுமே புருஷனோடு வாழ்ந்து அதன்பின் ஏறக்குறைய எண்பத்துநாலு வயது வரை விதவைக் கோலம் பூண்டவளாயிருந்த அவளது மனநிலை எப்படியிருந்திருக்கும் என்று சற்றே சிந்திப்போம்! அவள் நிச்சயமாகவே தன்னுடைய விதவையிருப்பை குறித்து அதிகக் கவலைகொள்ளாதவளாக இருந்திருக்கலாம். அதனால் தான் அவள் தேவாலயத்தை அண்டி, அதை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி ஆராதனை செய்து கொண்டிருந்தாள் என வாசிக்கிறோம். இந்த அன்னாளை நினைக்கும் போது எனக்கு மெய்யாகவே மெய்சிலிர்க்கிறது. பொதுவாக, சமுதாயத்தில் பிள்ளைகளெல்லாரும்

தாயையும் தகப்பனையும் விட்டுச் சென்று விடுவார்கள், ஆனால் கணவனும் மனைவியும் மட்டும் கடைசிவரை ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பார்கள் என்பர். ஆனால் இந்த அன்னாள் அந்த உறவை இழந்த போதிலும் தேவனைப்பற்றிக் கொண்டது எவ்வளவு விசேஷித்த மேன்மையாயிருக்கிறது! சங்கீதக்காரனாகிய தாவீது இரவும் பகலும் கர்த்தருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்கிறார். ஆம், இதன்படி இவள் ஒரு பாக்கியவதி, தேவலாயத்தை விட்டு நீங்காமல் உபவாசித்து ஜெபம் பண்ணி அதாவது மரியாள் இயேசுவின் பாதத்தைவிட்டு நீங்காமல் நல்ல பங்கை தெரிந்துகொண்டதுபோல, இவளும் தேவாலயத்தை விட்டு நீங்காது இருந்திருக்கிறாள்.

அன்பு சகோதரியே, நம்மை சுற்றிலும் உள்ள அநேகர் இந்த மீட்பரைப் பற்றி அறியாமலிருக்கிறார்கள். இந்த மீட்பராகிய இயேசுவைக் குறித்து அறிவித்தும் ஏற்றுக்கொள்ளாமல் ஏளனம் செய்கிறவர்களும் அநேகர். இப்படியிருக்க, நீங்கள் உங்களைக் குறித்தும், உங்களுடைய இழப்பு, வேதனை, கஷ்டம், நஷ்டம், உங்களுடைய உறவுகள் இதுபோன்ற இன்னும் எத்தனையோ காரியங்களைக் குறித்தும் சிந்தித்துக்கொண்டு இருக்கிறீர்களா? மார்த்தாளைப்போல அநேகக் காரியங்களைக் குறித்து கவலை கொண்டிருப்போமானால் நாம் ஒன்றையும் சாதிக்கப்போவதில்லை. மரித்தோர் மரித்தோரை அடக்கம்செய்யட்டும், நீயோ என்னைப் பின்பற்றி வா என இயேசு கூறிய வார்த்தை உங்கள் செவியில் விழவில்லையா? இயேசுவை அறிந்தும், அறியாதவர்களைப்போல, ஆவியில் மரித்தவர்களாக ஏனோ, தானோவென்று ஜீவிப்பதை தேவன் ஒருபோதும் விரும்புகிறதில்லை.

நம்மை நாமே தேவ சமூகத்தில் குணப்படுத்திக்கொண்டு மற்றவர்களை ஸ்திரப்படுத்த இந்த மீட்பின் செய்தியை அறிவிப்போம். மேன்மையான இந்தப் பணிக்கு ஈடான ஒரு பணியும் இவ்வுலகில் இல்லை. இழந்த காரியங்களையே நினைத்துக் கொண்டிராமல் வரப்போகும் பரலோக மேன்மையை நினைத்து, ஒவ்வொருநாளும் இழந்துகொண்டிருக்கிற ஸ்திரீகளைக் காப்பாற்றுவோம். அன்னாளைப் போல இரவும் பகலும் தேவசமூகத்தை விட்டு நீங்காமல் தனிப்பட்ட முறையில் உபவாசித்து, ஜெபித்து மீட்பின் செய்தியை அறிவிக்க ஆயத்தப்படுவோம்.

**முதல் ஜெபக்கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் (Attended the First Prayer Meeting) :**

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்கு தரிசனமாகி, அவர்களை நோக்கி பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறும்படி எருசலேமை விட்டுப் போகாமல் பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார் (அப்.1:3-5). அதன்படி "அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்" (அப்.1:14). இந்த ஜெபக்கூட்டம் இயேசு பரமேறிச்சென்றபின் கூடின முதல் ஜெபக்கூட்டம். அந்த முதல் ஜெபக்கூட்டத்தில் ஸ்திரீகளும் இயேசுவின் தாயாகிய மரியாளும் இருந்திருக்கிறார்கள். அப்போஸ்தலர்களெல்லாரும் இவர்களோடு ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். அந்த ஸ்திரீகள் செய்த காரியங்கள் இரண்டு.

**ஒன்று,** ஒருமனப்பட்டவர்களாயிருந்தார்கள். இயேசுவின் நாமத்தில் கூடுகிற அன்பு சகோதரியே, உங்களிடத்தில் இவ்விதமான ஒருமனமிருக்கிறதா? சபையில் ஒருவர் ஜெபிக்கும்போது கூடியிருக்கிற சிலர் தங்கள் தங்கள் மனதில் என்ன நினைத்திருக்கிறார்களோ அதைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள், இல்லாவிட்டால் எதற்காக அந்த நபர் விண்ணப்பிக்கிறாரோ அந்த விண்ணப்பத்தில் முழுகவனம் செலுத்திக் கொண்டிருப்பவருக்கு இடையூராக ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் என்று ஓயாமல் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். இப்படி ஜெபிப்பது ஒருமனப்பட்டு ஜெபிக்கின்ற ஜெபமாகவும் விண்ணப்பமாகவும் இருக்கமுடியாது. ஒருமனம் என்றால் ஒரே காரியத்தை கூடியிருக்கிற அனைவரும் மனதில் கொண்டு ஜெபிப்பதாகும். இடைவிடாமல் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள் என வேதம் கூறாமல் **"எல்லாவற்றிற்காகவும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்"** என்று கூறுகிறது ஆங்கில வேதாகமத்தில் **"Give thanks in all circumstances"** என்றுள்ளது. அப்படியானால் யோபு கூறினதுபோல் 'கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்' என எச்சூழலிலும் ஸ்தோத்திரம் சொல்ல வேண்டும்.

**இரண்டாவதாக**, அந்த ஸ்திரீகள் ஜெபத்திலும், விண்ணப்பத்திலும் தொடர்ந்து தரித்திருந்தார்கள். சில ஆங்கில வேதாகமங்களில் **Continued** மற்றும் **Constantly** என்று எழுதப்பட்டுள்ளது. ஜெபத்திலும், விண்ணப்பத்திலும் தொடர்ச்சியாக மற்றும் இடைவிடாமல் இருந்திருக்கிறார்கள். நாம் இங்கே சற்று சிந்திப்போம். நாம் கூடி ஜெபிக்கையில் இவ்வாறு இருக்கிறோமா? அல்லது ஜெபம் முடிவதற்குள் நம்சொந்த வேலைகளினிமித்தம் இடையிலேயே எழுந்து சென்று விடுகிறோமா? ஆதி



புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் என்ற வசனத்தின்படி சகோதரர்களோடு ஒருமனப்பட்டவர்களாக ஜெபத்திலும், விண்ணப்பத்திலும் தரித்திருந்த சமயத்தில் கிறிஸ்துவின் சபை எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. இன்றும் நம் தமிழகம் முழுவதும், ஏன் நம் பாரதம் முழுவதும் ஆங்காங்கே கிறிஸ்து தமது சபையை உருவாக்க வல்லவராயிருக்கிறாரே. நம்மைப் பாவத்திலிருந்து மீட்க இரத்தம் சிந்தி மரித்த இயேசுவுக்காக நீ என்ன செய்யப்போகிறாய்? என்பதை சிந்தித்துப்பார். முதலாவது மீட்பின் செய்தியை யூதர்களுக்கு அறிவித்த அன்னாளைப் போலவும், முதல் ஜெபக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஸ்திரீகளைப் போலவும், இயேசுவுக்காக இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்திற்காக எதையும் செய்ய முதலாவதாக இருப்போம். கர்த்தர் தாமே அவருக்குப் பிரியமானதைச் செய்ய நமக்கு உதவிசெய்வாராக!

## கேள்விகள்

1. எருசலேமில் மீட்பு உண்டாக காத்திருந்த யாவருக்கும் இயேசுவைக்குறித்து பேசினவள் யார்?
2. எல்லாவற்றிற்காகவும் என்ன செய்யவேண்டும்?
3. யார் தன் வீட்டைக்கட்டுகிறாள்?
4. பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருந்த அப்போஸ்தலர்களுடன் முதல் ஜெபத்தில் கலந்துகொண்ட ஸ்திரீகள் எப்படிப்பட்டவர்களாய் தரித்திருந்தார்கள்?
5. கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் என்று கூறியது யார்?

# நித்திய பலியான இயேசு கிறிஸ்து

Jesus Christ, Eternal Sacrifice

பெண்கள் பகுதி

-Betty



–சென்ற இதழின் தொடர்ச்சி

**உடன்படிக்கையின் அப்பம்**

அவருடைய சிலுவைப்பாடுகளுக்கு முன்பு அப்பத்தை எடுத்து அவர், "..வாங்கிப்புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது..."(மத்.26:26) என்றார்.

இந்த பாடங்களைக் கற்றுக்கொடுக்கும்படிக்கு, இந்த எண்ணங்கள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக எழுகின்றன:

(1) "இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்" (லூக்.22:19).

(2) "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து..." (1கொரி.11:26).

ஆதி கிறிஸ்தவர்கள் நினைவு விருந்துகளுக்கான இரண்டு எடுத்துக் காட்டுகளைக் கொண்டிருந்தனர்: **ஓய்வுநாள்தோறும்** கர்த்தருடைய சந்நிதியில் அடுக்கிவைக்கப்படும் நித்திய உடன்படிக்கைக்குரிய அப்பம் (லேவி.24:5-9) மற்றும் **வருடந்தோறும்** கைக்கொள்ளவேண்டியிருந்த பஸ்காவாகிய அப்பம். இன்று கிறிஸ்துவினிடத்தில் நம்பிக்கைவைத்துள்ள பிரிவினை சபை அங்கத்தினர்கள் அவருடைய நினைவுகூருதலில் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வருடத்திற்கொருமுறை பங்குகொள்கின்றனர், மேலும் புளிப்பில்லா அப்பத்திற்கும் திராட்ச ரசத்திற்கும் பதிலாக மற்ற பொருட்களை வைப்பது அசாதாரணமாக இருப்பதில்லை.

ஆனால் பழைய ஏற்பாட்டு கட்டளையின் கீழ் அடிக்கடி வருகின்ற அவர்களுடைய விருந்து அல்லது அவர்களோடு சம்பந்தப்பட்டிருந்த பொருட்கள் போன்றவற்றினிடையே தொந்தரவு ஏற்பட்டிருக்கவில்லை. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தேவன் தம்முடைய குமாரனின் நினைவுகூருதலை எத்தனை முறை கடைப்பிடிக்க விரும்புகின்றார் என்பதைப்பற்றிய அவர்களுடைய புரிந்துகொள்ளுதலில் மிகத் தெளிவாக இருந்தனர். மேலும் அவர்கள் அவருடைய சரீரத்தையும் அவருடைய இரத்தத்தையும் குறிக்கும் மாதிரிகள் எவை என்பதையும் தெளிவாக அறிந்திருந்தனர்.

இன்று உண்மைக் கிறிஸ்தவர்கள் இதே மாதிரியையே பின்பற்றுகின்றனர். ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவருவதில் அவர்களுடைய நோக்கம் அப்பம் பிட்குதலிலும் பானம்பண்ணுதலிலும் பங்கெடுப்பதாகவே இருக்கிறது (1கொரி.11:24-26).

(3) "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, ..... அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், ..... தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்" (1கொரி.11:28,26).

(4) "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; ...." (யோவா.6:54).

(5) "ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்" (யோவா.6:57)

இந்த விருந்தை சாதாரணமான ஒரு "சடங்காக" நினைப்பவர்கள் தவறிழைக்கின்றனர். இயேசு மிகுந்த ஆழமான கருத்துடனே நிதானமாக பொருட்களை தெரிவுசெய்தார் அத்தோடு இதில் பங்குகொள்ளுகிறவர்கள் இதன் பொருள் தங்களுக்குரியதென புரிந்துகொள்வது அவர்களுடைய பொறுப்பாகவுமிருக்கிறது.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியமே இந்த ஒழுங்கான நினைவுகூருதலில் பங்குகொள்வதில் தான் கட்டப்பட்டுள்ளது. **நாம் ஜீவிக்கின்றோம், ஏனென்றால் நமக்கு ஜீவன் கொடுக்கும்படி அவர் மரித்தார், ஏனென்றால் நம்மில் அவர் ஜீவிக்கிறார்.**

## ஜெபியுங்கள்



- இம்மாதம் சென்னை திருவல்லிக்கேணியில் நடைபெறும் கூட்டத்திற்காக...
- பள்ளியில் இறுதித்தேர்வு எழுதும் மாணவ, மாணவிகளுக்காக...
- புதிய வாசகர்களுக்காக...
- கர்த்தருடைய ஊழியத்தை செய்யும் ஒவ்வொரு ஊழியருக்காக...
- இவ்விதழை தொடர்ந்து வெளியிட்டு வரும் வத்தலக்குண்டு சபையாருக்காக...
- இவ்விதழோடு இணைந்து ஊழியம் செய்யும் ஊழியர்களுக்காக, அவர்களுடைய குடும்பங்களுக்காக...
- இவ்விதழுக்கு உதவி செய்யும் அன்பு உள்ளங்களுக்காக...

**விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்" – யாக்கோபு 5:15**

## ஆசிரியர் கடிதம்...

வாசகர் அனைவருக்கும் வல்லமையுள்ள ஆண்டவர் இயேசுவின் பரிசுத்தநாமத்தில் வாழ்த்துக்கள்.

இக்கடிதத்தின் மூலமாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். ஒவ்வொரு நாளும் குடும்பத்தின் தேவைகள், பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை இவைகளைப் பற்றி ஒவ்வொரு நாளும் சிந்திக்காத குடும்பங்கள் இருக்க முடியாது. காலை எழுந்ததிலிருந்து மாலை வேலைக்கு சென்று வீடுதிரும்பு மட்டும் தனக்கு கொடுக்கப்பட்டிருக்கிற வேலையை செய்ய ஒவ்வொருவருக்கும் நேரம் சரியாக இருக்கிறது. இதில் குடும்பக்காரியங்களை நினைத்தால் என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரு இயந்திர வாழ்க்கையை ஒவ்வொருவரும் செய்துகொண்டிருக்கிற காலமாக இது இருக்கிறது. ஒரு நிமிடத்தைக்கூட வீண்செலவு செய்யாமல் வாழ்ந்துகொண்டிருக்கும் காலம் என்று சொல்லலாம்.

இப்படியிருக்கிற இக்காலத்தில் நீங்கள் கர்த்தருக்கு கொடுக்கும் நேரம் எவ்வளவு? பைபிள் வாசிக்கும் பழக்கம் உண்டா? சபை கூடிவருதலை விட்டுவிடாதிருக்கிறீர்களா? ஆறுநாட்களும் உங்களுக்காக அல்லது உங்களுடைய குடும்பத்திற்காக உழைக்கிறீர்கள். கர்த்தருக்காக, கர்த்தருடைய சபைக்காக ஒரு நாளையாவது ஒதுக்கிவைத்திருக்கிறீர்களா? வேலைக்கு போய்வரவே நேரம் சரியாக இருக்கிறது. இதற்கு மேல் என்ன செய்வது, டி வி பார்த்துவிட்டு சாப்பிட்டு சீக்கிரம் படுக்கைக்குச் சென்றால்தான் மறுநாள் வேலைக்கு போகமுடியும் என்று சொல்லும் கூட்டம் ஒருபுறம் இருக்கிறது.

அன்பானவர்களே, நீங்கள் கர்த்தருக்குள் வளரவேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த மாத இதழை ஒவ்வொரு மாதமும் நாங்கள் அச்சிட்டு வெளியிடுகிறோம். கர்த்தருக்குள் வளர்ச்சியடைந்த ஒரு சிலருடைய உதவியினாலும் சில சபைகளின் உதவியினாலும் இவ்விதழ் உங்களுக்கு அனுப்பப்படுகிறது. கர்த்தரை அறியாதவர்கள் அறிந்துகொள்ளவேண்டும். இரட்சிக்கப்படாதவர்கள் இரட்சிக்கப்படவேண்டும். இக்கடைசி நாட்களில் ஆத்தும அறுவடையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். எங்களோடு மனம்விட்டு பேச ஒரு கடிதம் எழுதுங்கள். நம் மன பாரம் குறைய தேவனை நோக்கி ஜெபிப்போம்.

ஆசிரியர்

## நான் யார்? – Who Am I?



- நான் என் பெற்றோருக்கு 3ம் மகன்
- எனக்கு என் சகோதரர்களோடே சுதந்திரம் இல்லை
- எனது பட்டயங்கள் கொடுமையின் கருவிகள்
- கர்த்தருக்கு ஆராதனை செய்ய என் குமாரர்களை தெரிந்துகொண்டார்
- நானும் என் முற்பிதாக்கள் மூலம் தசமபாகம் கொடுத்தேன்
- வேதாகமத்தின் இறுதி புத்தகத்தில் என் கோத்திரம் எண்ணப்பட்டது
- நான் 137 வருஷம் உயிரோடிருந்தேன்

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

**நடத்தும்**

**மாபெரும் நற்செய்தி கூட்டம்...**

நாள்: 14.04.2023 வெள்ளிக்கிழமை

நேரம்: காலை 10.00 மணி முதல்
மாலை 4.00 மணி வரை

இடம்: கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்
தாமஸ் பில்டிங், மேயர் சிட்டிபாபு தெரு
திருவல்லிக்கேணி, சென்னை

இக் கூட்டங்களில் தி வேர்ட் ஆப் கிரைஸ் வெளியிடுகள் அனைத்தும் உங்களுடைய பார்வைக்கு வைக்கப்படும். நீங்கள் உங்கள் தேவைகளுக்கு ஏற்ப அவைகளை எழுதிப்பெற்றுக்கொள்ளலாம். கலந்து கொள்ளும் அனைவருக்கும் வேதாகமம் பரிசாக கொடுக்கப்படும்.

அனுமதி முற்றிலும் இலவசம். மதிய உணவு வழங்கப்படும். இக்கூட்டங்கள் குறித்து மேலும் அறிய விரும்பினால் இவ்விதழின் ஆசிரியரை தொடர்புகொள்ளவும். **94435 58041**



**மேலும் தொடர்புக்கு**
**சகோ.தாமஸ் ஐயா அவர்கள்,**
**தாமஸ் பேப்பர் ஸ்டோர்**
**மேயர் சிட்டிபாவு தெரு**
**திருவல்லிக்கேணி**
**சென்னை -600 005**
**மொபைல்: 98840 47398**

சிறுவர் பகுதி



# பூமியிலிருந்து அகற்றவேண்டும்

## Away from the earth

**வேத பகுதி:அப்போஸ்தலர் 22:17-22**

அப்போஸ்தலனாகிய பவுலை அறியாதவர்களே இருக்க முடியாது ஏனென்றால் பரிசுத்தவேதாகமத்திலே அவர்தான் அதிகமான புத்தகங்களை எழுதியிருக்கிறார். அப்படிப்பட்ட ஒரு பரிசுத்தவானை முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஜனங்கள் பூமியிலிருந்து அகற்றவேண்டும் என்று சொன்னார்கள். சொன்னவர்கள் வேறுயாரும் அல்ல அவனுடைய சுய ஜனத்தார்களே! அவனுக்கு விரோதமாக மிகுந்த சத்தமிட்டனர். இன்றைக்கும் அப்படித்தான் சுய ஜனங்கள் நம்மை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதைப்போல பவுலை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் ஞானஸ்நானம் பெற்று பின்பு எருசலேமுக்குத் திரும்பிவந்து, தேவாலயத்திலே ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கையில், ஞானதிருஷ்டியடைந்து அவரைத் (கர்த்தரைத்) தரிசித்தான். அப்பொழுது அவர் அவனை நோக்கி: நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஆதலால் நீ தாமதம்பண்ணாமல் சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போ என்றார்.

அதற்கு பவுல்: ஆண்டவரே, உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை நான் காவலில் வைத்து ஜெபஆலயங்களில் அடித்ததையும், உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது நானும் அருகே நின்று அவனைக் கொலைசெய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலைசெய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக்கொண்டிருந்ததையும். இவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றான். அதற்கு அவர்: நீ போ, நான் உன்னைத் துரமாய் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன் என்றார்.

அந்தப்படியாக அப்போஸ்தலனாகிய பவுலை தேவன் எடுத்துபயன் படுத்தினார். அவன் மூன்று சுவிசேஷப்பயணத்தினால் அநேக சபைகளை ஏற்படுத்தினான். மேலும் 14 நிருபங்களையும் எழுதினான். அவன் சொல்லும்போது எருசலேம் துவக்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம்வரைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன் என்கிறார். அவர் காலதாமதம் செய்யாமல், தேவனுடைய வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, தாமதமில்லாமல் ஊழியம் செய்யும்படியாக கடந்து சென்றார். இந்தப்பவுலைப்போல கர்த்தருக்கு நீங்களும் ஊழியம் செய்வீர்களா?

**மனப்பாட வசனம்:**

**"தீர்க்கதரிசி ஒருவனும் தன் ஊரிலே அங்கீகரிக்கப்படமாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக்கா4:24)**

## வேத அறிவுப் போட்டி எண்: 272


போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. அவர் சமுகத்தில் பர்வதங்கள் அதிர்ந்து மலைகள் கரைந்துபோகுமா?
2. வேலைக்காரர் சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்து இருக்க வேண்டுமா?
3. கர்த்தாவே, நியாயத்தீர்ப்புச் செய்ய அவனை வைத்தீர்; கன்மலையே, தண்டனை செய்ய அவனை நியமித்தீர் எந்த தீர்க்கன் கண்ட பாரம்?
4. தூங்குகிறவர்கள் இராத்திரியிலே தூங்குவார்கள்; வெறிகொள்ளுகிறவர்கள் எந்தநேரத்திலே வெறிகொள்ளுவார்கள்?
5. கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார் என்று எந்த தீர்க்கனைக் கொண்டு இஸ்ரவேலுக்கு சொல்லப்பட்டது?
6. உங்கள் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவாராக என எழுதும் அப்போஸ்தலன் யார்?
7. நீங்கள் திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக்கொண்டுவருகிறீர்கள்; நீங்கள் புசித்தும் என்னவாகவில்லை?
8. நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
9. பறக்கிற ஒரு புஸ்தகச் சுருளைக் கண்ட தீர்க்கன் யார்?
10. எவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கிதையுள்ள வனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாய் இருக்க வேண்டும் ?

## வேதாகம ஆய்வு... 56

## சவுல்
## Saul

1. பென்யமீன் கோத்திரத்தானாகிய கீசின் மகன் – 1சாமு.7:1,2
2. இஸ்ரவேலின் முதல் ராஜா
3. சாமுவேல் இவனை ராஜாவாக அபிஷேகம் பண்ணினான் – 1சாமு.11:15
4. கர்த்தருடைய ஆவி சவுலை விட்டு நீங்கினார் – 1சாமு.16:14
5. தேவன் 40 வருஷம் அரசாள சவுலை இஸ்ரவேலுக்கு கொடுத்தார் – அப்.13:21



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
April 2023



தமிழ்நாடு மற்றும் ஆந்திரபிரதேசம்
கிறிஸ்துவின் சபை போதகர்கள் 2023

Tamilnadu and Andhra Pradesh
Church of Christ Preachers 2023

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

பெண்களுக்கான
சிறப்பு புத்தகம்
இன்றே வாங்கி
பயன்பெறுங்கள்



To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA




Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan